பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 09 2026 TUESDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரிக்ஸ் உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதன் மூலம், இந்தியாவின் ஒருங்கிணைப்புத் திறனை உலக நாடுகள் உணர்ந்துள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. இரண்டாயிரம் ரூபாய் வரையிலான UPI பரிவர்த்தனைகளுக்கு வங்கிகள் எந்தவொரு கட்டணமும் விதிக்கக்கூடாது என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

3. நீதித் துறையில், தொடர் சீர்திருத்தம் மற்றும் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

4. நேபாளத்திற்கு வரும் டிசம்பர் 31ஆம் தேதிவரை, நாளொன்றுக்கு 18 மணி நேரம் மின்சாரம் வழங்க மத்திய எரிசக்தி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

5. சவுதி அரேபியா மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளதால், மத்திய கிழக்கு பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

பிரிக்ஸ் உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியிருப்பதன் மூலம், இந்தியாவின் வலுவான ஒருங்கிணைப்புத் திறனை உலக நாடுகள் உணர்ந்திருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலக அளவில் முக்கிய நாடுகளுக்கிடையே மோதல்கள் நடைபெற்று வரும் சூழலில் இந்த உச்சிமாநாடு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

புதுதில்லி கூட்டுப் பிரகடனத்தை அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொண்டதாகவும் அமைச்சர் கூறினார்.

அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, உலகளாவிய வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலியில் தடையற்ற இயக்கம், மக்களுடனான இணைப்பு போன்றவற்றில் பிரிக்ஸ் மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்காசிய மோதல் விவகாரத்தில் அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து, பிரிக்ஸ் மாநாட்டில் விவாதிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தீவிரவாத நடவடிக்கைகள் மிகப் பெரிய குற்றம் என்பதை பிரிக்ஸ் நாடுகள் தெளிவுபட எடுத்துரைத்ததாகவும், பஹல்காம் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தீவிரவாதத்தை எந்தவொரு வடிவிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை பிரிக்ஸ் நாடுகள் உறுதிபட தெரிவித்ததாகவும் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

>>>>>>><<<<<<

இரண்டாயிரம் ரூபாய் வரையிலான UPI பரிவர்த்தனைகளுக்கு வங்கிகள் எந்தவொரு கட்டணமும் விதிக்கக்கூடாது என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிக்கையில், RuPay கார்டுகள் மூலமாக மேற்கொள்ளப்படும் இரண்டாயிரம் ரூபாய் வரையிலான பரிவர்த்தனைகளுக்கும் கட்டணம் ஏதும் வசூலிக்கக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

UPI பரிவர்த்தனைகளுக்கான கட்டணங்கள் குறித்த விதிமுறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு, அதற்கான அறிவிப்பை நிதியமைச்சகம் வெளியிட்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

தனிநபர் மற்றொரு நபருக்கு மேற்கொள்ளும் UPI பரிவர்த்தனைகள், தொடர்ந்து இலவசமாகவே அளிக்கப்படும் என்றும் நிதியமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

>>>>>>><<<<<<

நீதித் துறையில், தொடர் சீர்திருத்தம் மற்றும் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நீதிபதிகளுக்கு எதிரான புகார்களை கையாள்வதற்கு உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்தால் வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

நீதித் துறையின் தூண்களாக வெளிப்படைத்தன்மையும், பொதுமக்களின் நம்பிக்கையும் அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீதித் துறையின் மீதான விமர்சனங்களை உச்சநீதிமன்றம் புறந்தள்ளிவிட முடியாது என்றும் தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

விநாயகர் சதுர்த்தியை ஒட்டி, புதுதில்லியில் உள்ள மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இல்லத்தில் நடைபெற்ற பூஜையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்றார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், விநாயகரின் அருள் அனைவருக்கும் எப்போதும் நிலைத்திருக்கட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமது இல்லத்திற்கு பிரதமர் வந்தது குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அமைச்சர் திரு. பியூஷ் கோயல், இது தமக்கு கிடைத்த மிகப் பெரிய பாக்கியம் என்று தெரிவித்துள்ளார்.

விநாயகர் அனைத்து தடைகளையும் நீக்கி, மக்களுக்கு நன்மையை அளிக்க தாம் பிரார்த்தனை செய்வதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<

பூட்டான் சென்றுள்ள தலைமை தேர்தல் ஆணையர் திரு. Gyanesh Kumar, திம்புவில் அந்நாட்டு மன்னர் Jigme Khesar Namgyel Wangchuck-ஐ சந்தித்து பேசினார்

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தியா - பூட்டான் இடையே ஜனநாயக ஒத்துழைப்பு மற்றும் நட்புறவை வலுப்படுத்தும் வகையில் இந்த சந்திப்பு அமைந்ததாக தெரிவித்துள்ளது.

பூட்டான் நாட்டின் தேசிய வாக்காளர் தினம் இன்று கடைபிடிக்கப்படும் நிலையில், அதற்கான நிகழ்ச்சியில் திரு. Gyanesh Kumar பங்கேற்கிறார்.

>>>>>>><<<<<<

ராஜஸ்தான் மாநில உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபிக்கு அமோக வெற்றியைத் தேடித் தந்த அம்மாநில மக்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

ஜெய்ப்பூர், உதய்ப்பூர், பில்வாரா, கோட்டா உள்ளிட்ட 10 மாநகராட்சிகளிலும் பிஜேபி பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றுள்ளது.

Bikaner மாநகராட்சியில் மட்டுமே காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது.

ஜோத்பூர், ஆழ்வார், அஜ்மீர், பாலி மாநகராட்சிகளை பொறுத்தவரை இருகட்சிகளுக்கும் பெரும்பான்மை இல்லாத நிலையில், சுயேட்சை உறுப்பினர்களின் ஆதரவை பெறவேண்டிய சூழல் எழுந்துள்ளது.

47 நகராட்சி கவுன்சில்களிலும், 252 நகராட்சிகளிலும் பிஜேபி வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றி குறித்து செய்தியாளர்களிடம் பேசிய

ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை இந்த வெற்றி உணர்த்துவதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பொய்ப்பிரச்சாரங்களை முறியடித்து, உண்மைக்கு கிடைத்த வெற்றி இது என்று குறிப்பிட்டுள்ளார்.

இரட்டை எஞ்சின் அரசின் நல்லாட்சி மற்றும் வளர்ச்சி சார்ந்த கொள்கைகளை ராஜஸ்தான் மக்கள் ஆதரிப்பதை இந்த வெற்றி மீண்டும் தெளிவுபடுத்தியிருப்பதாகவும், மாநிலத்தின் வளர்ச்சியை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதற்கான உறுதிப்பாட்டை இது வலுப்படுத்தும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் நேற்றிரவு சென்னை வந்தடைந்தார்.

விமான நிலையத்தில் அவரை பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

>>>>>>><<<<<<

பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாளத்திற்கு வரும் டிசம்பர் மாதம் 31ஆம் தேதிவரை, நாளொன்றுக்கு 18 மணி நேரம் மின்சாரம் வழங்க மத்திய எரிசக்தி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, கடந்த 13ஆம் தேதி தொடங்கி, நள்ளிரவு 12 மணி முதல் மாலை 6 மணிவரை முஸாஃபர்பூர் - தல்கேபார் வழித்தடத்தில் 600 மெகாவாட் மின்சாரமும், தனக்பூர் - மகேந்திரநகர் வழித்தடத்தில் 54 மெகாவாட் மின்சாரமும் வழங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் வழங்கப்பட வேண்டிய மின்சாரத்தின் அளவு குறித்து, வரும் டிசம்பர் மாதத்தில் மறுஆய்வு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நேரிட்ட வெள்ள பாதிப்பால், நேபாளத்தின் நீர்மின் கட்டமைப்பில் மிகப்பெரிய சேதம் ஏற்பட்டு, அந்நாட்டின் மின்உற்பத்தி திறன்

குறைந்துள்ளதை கருத்தில் கொண்டு, மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

>>>>>>><<<<<<

ஈரான் ஆதரவு பெற்ற ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள், சவுதி அரேபியா மீது மீண்டும் தாக்குதலை தொடங்கியுள்ளதால், மத்திய கிழக்கு பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

செங்கடலுக்கு அருகே மேற்கு கடற்கரையோர பகுதிகளில் தங்களின் ஆதிக்கத்தை வலுப்படுத்தும் வகையில், ஹவுதி அமைப்பினர் இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, ஈரானுடன் நடத்தவிருந்த பேச்சுவார்த்தையை வளைகுடா நாடுகள் ஒத்தி வைத்துள்ளன.

மத்திய கிழக்கில் நிலவும் சூழல் காரணமாகவும், உலகளாவிய கச்சா எண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தேக்கநிலையை கருத்தில் கொண்டும் பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்படுவதாக வளைகுடா நாடுகள் அறிவித்துள்ளன.

>>>>>>><<<<<<

ரஷ்யாவும், யுக்ரைனும் எரிசக்தி இலக்குகளை குறி வைத்து தாக்குதல் நடத்துவதை நிறுத்திக் கொள்ள ஒப்புக் கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், தாக்குதல் எப்போது நிறுத்தப்படும் என்ற தகவலை அதில் வெளியிடவில்லை.

தாக்குதல் நிறுத்தப்படுவதற்கு நிபந்தனைகள் ஏதும் விதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்த தகவலையும் திரு. ட்ரம்ப் அதில் குறிப்பிடவில்லை.

இதனிடையே, தாக்குதலை நிறுத்துவதற்கு யுக்ரைன் சம்மதித்திருப்பதாக வெளியாகியுள்ள தகவலை ரஷ்ய அதிபர் மாளிகை வரவேற்றுள்ளது.

>>>>>>><<<<<<

இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையேயான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

இந்தியா வந்துள்ள ஆப்கானிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட டிவென்டி டிவென்டி கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது.

நேற்று முன்தினம் முடிவடைந்த முதலாவது போட்டியில், ஸ்ரேயஸ் ஐயர் தலைமையிலான இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

>>>>>>>END<<<<<<